சுருக்கம்

மாநிலத் திட்டம் - நமது கிராமம் திட்டம் - 2005-2006 - நிதி விடுவித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது

---

ஊரக வளர்ச்சித் (மதி-1) துறை

அரசாணை (நிலை) எண்.127 நாள் 16.9.2005

படிக்க

1) அரசாணை (நிலை) எண்.140, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 10.9.2004
2) அரசாணை (நிலை) எண்.59, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 3.5.2005
3) ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண்.33994/05/மாதி.5, நாள் 2.6.2005.

---

ஆணை-

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2004-2005ம் ஆண்டுக்கு நமது கிராமம் திட்டத்தினை செயல்படுத்துவதற்குரிய விரிவான நெறிமுறைகள் வகுக்கப்பட்டு இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.200.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 2005-2006ம் ஆண்டில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ரூ.10.00 லட்சம் வீதம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த 2005-2006ம் ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண் | கூறுகள் | அரசின் உதவித் தொகை | சமஉதொமே திட்டம் | மொத்தம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1) | அரசின் நேரடி உதவித் தொகை (DSA) | 144.25 | 20.50 | 164.75 |
| 2) | செயல்திறன் அடிப்படையாகக் கொண்ட அரசு உதவித் தொகை (PSA) | 25.75 | - | 25.75 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3) | தகவல், கல்வி விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் இவை தொடர்பான பணிகள் | 5.00 | - | 5.00 |
| | மொத்தம் | 175.00 | 20.50 | 195.50 |

3. இத்துறை நிதித்துறை, தலைமைச் செயலர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் (செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சி) ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்பு 2005-2006ம் நிதியாண்டில் நமது கிராமம் திட்டத்திற்கான நிதியை பின்வருமாறு ஒதுக்கீடு செய்ய அரசு ஆணையிடுகிறது.

| வ.எண் | பிரிவு / கூறுகள் | அரசின் உதவித் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | அரசின் நேரடி உதவித் தொகை (DSA) | 164.75 |
| 2 | செயல் திறன் அடிப்படையாகக் கொண்ட அரசு உதவித் தொகை (PSA) | 10.75 |
| 3 | தகவல், கல்வி, விழிப்புணர்வு மற்றும் பயிற்சி (IEC) மற்றும் இவை தொடர்பான பணிகள் | 5.00 |
| | மொத்தம் | 180.50 |

2005-06ஆம் ஆண்டில் நமது கிராமம் திட்டத்தினை செயல்படுத்த ரூ.180.50 கோடியை கீழ்க்கண்டவாறு விடுவிக்க அரசு ஆணையிடுகிறது.

1. நமது கிராமம் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் அரசின் நேரடி உதவித் தொகையான ரூ.164.75 கோடியைப் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்து வழங்குவதற்கான அதிகாரத்தினை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வழங்க அரசு ஆணையிடுகிறது.

2. செயல் திறன் அடிப்படையாகக் கொண்ட அரசின் உதவித் தொகை மாவட்டங்களிலிருந்து சாதனை மதிப்பீடு செய்யும் காரணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் பிரித்து வழங்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

3. ஆணையர் மற்றும் இயக்குநர் (பயிற்சி) அவர்களின் கருத்துருப்படி, தகவல், கல்வி, விழிப்புணர்வு மற்றும் பயிற்சி மற்றும் இவை தொடர்பான பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.5.00 கோடியை ஊரக வளர்ச்சி இயக்குநர் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ரூ.175.00 கோடியை வரவு செலவு திட்ட மதிப்பீடு 2005-2006ல் ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கத்திலிருந்து பெற்று வழங்கிடவும், கூடுதலாகத் தேவைப்படும் தொகை ரூ.5.50 கோடியை திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடு 2005-06ல் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கிடவும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கம் செய்வது தொடர்பான வரவு செலவு திட்ட கருத்துக்களை நிதி (ஊரக வளர்ச்சித்) துறைக்கு திருத்த / இறுதி திருத்திய மதிப்பீடுகள் 2005-2006ல் சேர்த்து அனுப்புமாறும் ஊரக வளர்ச்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலும் கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

அ) இத்திட்டம் 12618 கிராம ஊராட்சிகளிலும் 562 சிறப்பு கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட வேண்டும்.

ஆ) ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் / சிறப்பு கிராம ஊராட்சிக்கும் கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு 2005-2006ம் ஆண்டில் ரூ.1.25 லட்சம் அரசின் நேரடி உதவித் தொகையாக வழங்க வேண்டும்.
இ) அரசின் நேரடி உதவித் தொகை மூலம் கிராம ஊராட்சிகள் / சிறப்பு கிராம ஊராட்சிகள் கீழ்க்காணும் பணிகளை செய்ய பயன்படுத்திக் கொள்ளலாம்

1) சிமெண்ட் சாலைகள் அமைத்தல், (2) தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள இதர பணிகள்

ஈ) அரசின் நேரடி உதவித் தொகை மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை எடுத்துச் செய்ய கிராம ஊராட்சிகளின் கிராம சபைகள் ஒப்புதலுடன் மற்றும் சிறப்பு கிராம ஊராட்சிகளின் தீர்மானத்தின் அடிப்படையில் கீழ்க்காணும் பணிகளை எடுத்துச் செய்யலாம்.

1. சிமெண்ட் சாலை அமைத்தல்
2. தெரு விளக்குகள் அமைத்தல்
3. சத்துணவு மையங்கள்
4. சமையற் கூடங்கள்
5. மேல்நிலைத் தொட்டிகள்
6. தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள்
7. குடிநீர் குழாய் விரிவுபடுத்துதல்
8. தடுப்புச் சுவர்
9. சிறு பாலங்கள்
10. சாலைப் பணிகள்
11. பொது விநியோகக் டைகள் (Ration Shops )
12. மக்கும் உரக் குழி அமைத்தல் (Compost Yard) / திடக்கழிவு மேலாண்மை சமுதாயப் பணிகள்

உ) திட்டச் செயலாக்கம் மற்றும் சாதனை செயல் திறன் அடிப்படையிலான அரசு உதவி அளிப்பதற்கான (PSA) சாதனை மதிப்பீடு செய்யும் காரணிகளின் (Indicators) மாற்றங்களைக் கொண்டு வருவது குறித்து செயற் குறிப்பு பெற்று பரிசீலித்து தனி ஆணையிடப்படும்.

6. மேலே பத்தி 3 மற்றும் 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

4515-00-ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு-101-பஞ்சாயத்து ராஜ்-பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பணிகள் 11. மாநிலத் திட்டம் ஜே.ஏ. - கிராம வளர்ச்சித் திட்டம்-09 உதவி மான்யங்கள்-03 குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள் (த.தொ.எண்.4515-00-101-ஜேஏ-0936)

7. இவ்வரசாணை நிதித் துறை கூடுதல் செலவினப் பேரேடு எண்.762-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சாந்தா ஷீலா நாயர்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-15
ஆணையர் (மற்றும்) ஊரக வளர்ச்சி இயக்குநர் (பயிற்சி), சென்னை-15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து திட்ட அலுவலர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
சம்பளம் (மற்றும்) கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை-35
மாநிலக் கணக்காயர்,. சென்னை-6/18/35
நகல்-
நிதி (ஊவ) (வவ) மற்றும் (வ.செ) துறை, சென்னை-9
திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9
மாண்புமிகு செய்தி, விளம்பலம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
ஊரக வளர்ச்சி (தி.1, தி2, தி3, 4 (ம) ஊ.அ(2)) துறை, சென்னை.9
இருப்புக் கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்